www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

பன்னிரெண்டாம் வகுப்பு

பொருளியல்

நேரம்: 1.30 மணி

பதிவு எண்: | | | | | | |

மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10

1. GST இதற்கு சமம்
   அ) விற்பனை வரி ஆ) தொழிற்குழும வரி இ) வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி
2. பொதுக்கடனைத் திரும்பச் செலுத்தும் முறை
   அ) கடனை மாற்றுதல் ஆ) மூழ்கும் நிதி
   இ) பகுதியாகச் செலுத்துதல் ஈ) இவை அனைத்தும்
3. நவீன அரசு எனப்படுவது
   அ) தலையிடா அரசு ஆ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு
   இ) நலம் பேணும் அரசு ஈ) காவல் அரசு
4. வரி கீழ்காணும் குணங்களைக் கொண்டது
   அ) கட்டாயத் தன்மை ஆ) பிரதிபலன் கருதாமை
   இ) வரி மறுப்பு ஒரு குற்றம் ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்
5. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை ..............
   அ) சந்தைப் பொருட்கள் ஆ) சந்தையிடா பொருட்கள்
   இ) இரண்டும் ஈ) மேற்சொன்ன ஏதுவுமில்லை.
6. மின்னணு கழிவுகள் .............. என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.
   அ) திடக்கழிவுகள் ஆ) குப்பை கழிவுகள்
   இ) இ - கழிவுகள் ஈ) மருத்துவமனைக் கழிவுகள்
7. அமில மழை .............. விளைவுகளில் ஒன்று.
   அ) காற்று மாசு ஆ) நீர் மாசு இ) நில மாசு ஈ) ஒளி மாசு
8. எம்.என்.ராய் வழங்கியத் திட்டம் கீழ்கட்டவைகளில் எது?
   அ) காங்கிரஸ் திட்டம் ஆ) மக்கள் திட்டம்
   இ) பாம்பே திட்டம் ஈ) இவை எதுவுமில்லை
9. நீண்டகாலத் திட்டத்தின் மற்றொரு பெயர் ............
   அ) மேம்பாட்டுத் திட்டம் ஆ) மேம்பாடு இல்லாத திட்டம்
   இ) முன்னோக்குத் திட்டம் ஈ) முன்னோக்கமற்ற திட்டம்
10. சட்டப்பூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்க்கண்ட எந்தப் பதவியில் உள்ள ஒருவர் செயல்படுவார்.
   அ) பிரதமர் ஆ) குடியரசுதலைவர்
   இ) உதவி குடியரசுதலைவர் ஈ) நிதி அமைச்சர்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - ஆ

**II.** எவையேனும் ஐந்து வினாவிற்கு விடையளி.
வினா எண் 18க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5×2=10

11. வரி கட்டணம் வேறுபடுத்துக.
12. GST யின் கூறுகள் எவை?
13. பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம் குறிப்பு வரைக.
14. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.
15. விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.
16. ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.
17. பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.
18. பொருளாதார முன்னேற்றம் - வரையறு.

## பகுதி - இ

**III.** எவையேனும் ஐந்து வினாவிற்கும் விடையளி.
வினா எண் 26க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 5×3=15

19. வரிவிதிப்பு விதிகளை விவரிக்க.
20. நவீன அரசின் பணிகள் யாவை? (ஏதேனும் மூன்று)
21. நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.
22. நிலமாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
23. இ - கழிவுகள் என்பதன் பொருள் தருக.
24. நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?
25. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக.
26. நிதி ஆயோக்கின் பணிகள் எவை?

## பகுதி - ஈ

**IV.** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

27. அ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.

28. அ) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்

விளக்குக.

(அல்லது)

ஆ) அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

29. அ) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) (குறிப்பு வரைக: அ) பருவநிலைமாற்றம் ஆ) அமிலமழை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com